**செய்தி வெளியீடு எண் : 012** **நாள்: 03.01.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைமை அலுவலகத்தில் இன்று (03.01.2022) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் இயக்குநர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் உடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அனைத்து இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர்கள், தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணையின்படி 2021–22 எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட கீழக்கண்ட திட்டங்கள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

1. அதிக மின்பளு மற்றும் குறைந்த மின்னழுத்த மின்மாற்றியினை சீர்செய்தல்.
2. ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்குதல் மற்றும்
3. புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல், திறன் மின்மாற்றிகளை மேம்படுத்துதல்.

அதிக மின்பளு. குறைவழுத்த மின்மாற்றிகளை மாற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட மொத்த இலக்கான 8,905 மின்மாற்றிகளில் 7,833 மின்மாற்றிகளுக்கான பணிகள் (88 சதவீதம்) நிறைவு பெற்று மின்னூட்டம் செய்யப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள பணிகளை வரும் 31.01.2022–க்குள் விரைந்து முடித்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி விவசாய உற்பத்தியை பெருக்கவும் விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன், ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட ஆணைகளுக்கு இணங்க 01.01.2022 வரை

20,132 விவசாய மின் இணைப்புகள் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 30,173 விவசாயிகள் பல்வேறு பிரிவுகளின் கீழ் தங்கள் தயார் நிலையை பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கு உண்டான மின் விரிவாக்க பணியை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் துரிதமாக முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த பெரும் மழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக விவசாய மின் இணைப்புகளுக்கான மின் விரிவாக்க பணிகள் மேற்கொள்வதில் சிறிது தொய்வு ஏற்பட்டது. தற்போது, நிலைமை சீரடைந்து இருப்பதால் இந்த பணிகளை விரைந்து முடித்திடுமாறும் இந்த நிதி ஆண்டிற்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை முழுமையாக அடைய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேற்கண்ட இரு பணிகளுக்கும் தேவையான மின் தளவாட பொருட்களாகிய மின்கம்பங்கள், மின்கம்பிகள் மற்றும் மின்மாற்றிகள் தேவையான அளவிற்கு கொள்முதல் செய்வதற்கு உத்தரவிடப்பட்டு தேவையான தளவாட பொருட்கள் இருப்பில் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மேட்டூர், தூத்துக்குடி, வடசென்னை அனல் மின் நிலையங்களுக்கு ரூ.80 இலட்சம் செலவில் 5 எண்ணம் ஃபாம் கலோரி மீட்டர் கொள்முதல் செய்து அதனை பொருத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வடசென்னை அனல் மின் நிலையம்–1–ல் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக, ரூ.16.29 கோடி செலவில் பாரத மிகு மின் நிறுவனத்திற்கு ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

கோதையாறு நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/ கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் மணலாறு நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/தேனீ மாவட்டம் ஆகிய இரு திட்டங்களுக்கு, சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கான பணி ஆணை M/s.Tractabel Engineering Pvt., Ltd., ஹரியானா–விற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2022–ல் பணிகள் முடிக்கப்படும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது :–**

மாண்புமிகு தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் இந்த நிதி ஆண்டுக்குள் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

குறிப்பாக 8,905 புதிய மின்மாற்றிகள் அமைக்கக் கூடிய பணிகள் 29.08.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் கொளத்தூர் தொகுதியில் தொடங்கி வைத்தார்கள். இந்த நான்கு மாத காலத்தில் 8,905 புதிய மின்மாற்றிகள் அமைக்கக்கூடிய அந்தப் பணிகளில் 7,833 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மீதம் இருக்கக்கூடிய 1,702 மின்மாற்றிகள் ஒருமாத காலத்திற்குள் முழுவதுமாக பணிகள் முடிக்கப்பட்டு அந்த 1,072 மின்மாற்றிகளும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட இருக்கின்றன. நான்கு மாதகாலத்தில் 7,833 புதிய மின்மாற்றிகள் முழுவதுமாக நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு இருக்கின்றன.

அதேபோல மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் 23.09.2021 அன்று ஒரு லட்சம் விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு கொடுக்கக்கூடிய சிறப்பு வாய்ந்த திட்டத்தை தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்தார்கள்.

இந்த மூன்று மாதகாலத்தில் 20,132 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. 30,173 விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் கொடுப்பதற்கான பணிகள் நடைபெற்று கொண்டு இருக்கின்றன. மொத்தமாக 50,000–க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கான மின் இணைப்பு பணிகள் நிறைவு பெற இருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 50,000 விவசாயிகளை கண்டறியக்கூடிய பணிகள் துரிதகதியில் நடைபெற்று கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட

இந்த சிறப்புத் திட்டம் வருகிற மார்ச் 31–ம் தேதிக்குள் ஒரு இலட்சம் விவசாயிகள் பயன்பெறக்கூடிய இந்த திட்டம் நிறைவு பெற இருக்கின்றது.

அதேபோல, சட்டமன்றத்தின் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி அறிவிக்கப்பட்ட 216 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான அறிவிப்பின் அடிப்படையில் 143 துணை மின் நிலையங்களுக்கான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிமழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலங்கள் வகை மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 73 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்படுவதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு மேலாண்மை இயக்குநர் அவர்கள் கடிதம் எழுதி இருக்கின்றார்கள். அந்த கடிதத்தின் அடிப்படையில் எந்தெந்த இடங்களில் மாவட்ட ஆட்சியாளர்கள், இடம் இருக்கின்றது என்று பதில் அளித்துள்ளார்கள். அந்த இடங்கள் பெறுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த 143 துணை மின்நிலையங்களை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் அதற்கான டெண்டர் கோரக்கூடிய பணிகள் இப்பொழுது நடைபெற்று கொண்டிருக்கின்றன. எனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் விரைவாக வேகமாக செயல்படுத்துவதற்கான பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் முன்னெடுத்திருக்கின்றது.

டாஸ்மாக் பார் அமைப்பதற்கான விண்ணப்பத்தினை ஆன்லைனில் மூலம் பெறலாம். யாரு வேண்டுமானாலும் ஆன்லைனில் அப்ளிகேஷன் பதிவிறக்கம் செய்து தங்களுடைய டெண்டர் படிவங்களை பூர்த்தி செய்து அந்த டெண்டரில் கலந்து கொள்ளலாம். மேலும், நேரிலும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். இரண்டு வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 5,387 கடைகள் இருக்கின்றன. அதில் 2,168 கடைகளில் மட்டும்தான் கடந்த காலங்களில் பார்கள் செயல்பட்டுஇருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 1,551 கடைகளில் பார் செயல்படுத்துவதற்கான வசதிகள் இருந்தும் அந்த இடங்களில் முறையான டெண்டர் விடவில்லை ஆனால் அந்த பார்கள் செயல்படக்கூடிய நிலையில் கடந்த காலங்களில் இருந்தன. அதை எல்லாம் மாற்றி இப்பொழுது முழுவதுமாக எந்தெந்த

கடைகளில் பார் நடத்துவதற்கு வசதி இருக்கின்றதோ அவை முழுவதும் கண்டறியப்பட்டு அந்த இடங்களிலும் டெண்டர் மூலமாக பணிகளை கொடுப்பதற்கான ஒப்பந்தங்கள் தான் இப்பொழுது கோரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக 2019–ல் நடைபெற்ற டெண்டரில் 5,387 கடைகளுக்கு சேர்த்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் 6,482. இந்த ஆண்டு வெளிப்படையான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டதின் அடிப்படையில் 11,715 விண்ணப்பங்கள் இதுவரை வரப்பெற்றிருக்கின. 6,400 எங்கே? 11,700 எங்கே? யாரெல்லாம் டெண்டரில் கலந்து கொள்ள வேண்டும் என்று முடிவு எடுத்தார்களோ அவர்கள் எல்லோரும் ஆன்லைனில் பதிவிறக்கம் செய்து படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்திருக்கின்றார்கள். நேரில் விண்ணப்பங்களை பெற்றவர்களும் படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்திருக்கின்றார்கள். மேலும், அந்ததந்த டாஸ்மாக் மாவட்டங்களின் இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள்/ஒப்பந்தாரர்களின் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு, அனைவரும் அதை காணலாம். இவ்வாறு வெளிப்படை தன்மையுடன் தான் டாஸ்மாக் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றன. டெண்டர்கள் எல்லோரின் முன்னிலையில் தான் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமானால், 2019 ஆம் ஆண்டு என்ன ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகள் வைக்கப்பட்டதோ அதே விதிமுறைகள்தான் தற்போதும் பின்பற்றப்பட்டது. கூடுதலாக இரண்டு விதிமுறைகள்தான் சேர்க்கப்பட்டியிருக்கிறது. ஒன்று டாஸ்மாக் பார்கள் துய்மையாக வைப்பது, இன்னொன்று முழுமையாக அமரும் வசதிகள் ஏற்படுத்துவது. இந்த இரண்டு நிபந்தனைகள் தான் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. மீதி எல்லாம் 2019ல் இருந்த அதே 66 நிபந்தனைகளே. அதே 66 நிபந்தனைகள்தான் இந்த டெண்டரிலும் பின்பற்றப்படுகின்றன. கூடுதலாக கோவிட் காலத்தையொட்டி இரண்டு நிபந்தனைகள் சேர்த்து 68 நிபந்தனைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மையுடன் தான் நடைபெற்று கொண்டிருக்கின்றன. இதில் எந்தவிதமான ஒளிவு மறைவிற்கும் இடம் கிடையாது.

பொதுமக்கள் மின் கம்பங்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் மின்னகத்திற்க்கு தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் அந்த மின் கம்பங்கள் மாற்ற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கடந்த ஆட்சியில் 2016 முதல் விவசாய மின் இணைப்பிற்கு மீட்டர் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. மார்ச் 2021 வரை 2,66,000 விவசாயிகளுக்கு மீட்டர் பொருத்தும் பணிகளை அவர்களே முடித்திருக்கிறார்கள். அவருடைய அறிக்கையில் இவையெல்லாம் இருக்காது. மீட்டர் பொருத்தும் பணி ஏதோ புதியதாக தொடங்கப்பட்டுள்ளதை போல் அறிக்கை விட்டிருக்கிறார். 2016 ஆம் ஆண்டு விவசாய மின் இணைப்பிற்கு மீட்டர் பொருத்தும் பணிகளை அவர்கள் ஆட்சியில் தான் தொடங்கியிருக்கிறார்கள் அதை மறைத்து அல்லது மறந்து அறிக்கைவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்கட்சி துணைத் தலைவர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு இவ்விஷயம் தெரியுமா தெரியாத என்று தெரியவில்லை,

இதேபோல் ஏதோ புதியதாக இதர கட்டணங்களுக்கு ஜி.எஸ்.டி வசூல் செய்வதை போல் இன்னொரு அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். 2017 ஆம் ஆண்டு ஜி.எஸ்.டி நடைமுறைக்கு வந்தது. 2018 ஆம் ஆண்டு முதல் மின்சாரவாரியத்தில் இதர கட்டணங்களுக்கு ஜி.எஸ்.டி வசூலிக்கும் நடைமுறைகளை தொடங்கியவர்களே அவர்கள் தான். 2017 ஆம் ஆண்டு ஜி.எஸ்.டி கவுன்சிலுக்கு மின்சாரவாரியம் கடிதம் எழுதி இந்த நடைமுறையை கொண்டுவர வேண்டுமா என கேட்டு, அவர்கள் கொண்டுவர வேண்டும் என தெரிவித்து எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கமால் 2018 ஆம் ஆண்டு இதர கட்டணங்களுக்கு ஜி.எஸ்.டி வசூல் செய்யும் முறையினை அவர்கள் தான் நடைமுறைபடுத்தினார்கள். இப்பொழுது எதோ புதியதாக தமிழ்நாடு அரசு மின்கட்டணத்திற்கு ஜி.எஸ்.டி வசூல் செய்வதாக திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். 2018 முதல் இதர கட்டணங்களுக்கு ஜி.எஸ்.டி வசூல் செய்யும் முறை இருப்பதை திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிந்துகொண்டு இந்த அறிக்கையை வெளியிட்டிருக்க வேண்டும்.

பொதுவாக மின்சாரவாரியத்தில் மின் கட்டணங்களுக்கு ஜி.எஸ்.டி வசூல் செய்யும் முறையில்லை. 2018–இல் இருந்த நடைமுறைகள்தான் இருக்கின்றன. புதிய உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. 2017 – 2018 ஆம் ஆண்டின் ஜி.எஸ்.டி நிலுவைத்தொகை ரூ.34 கோடி வசூல் செய்ய கடந்த ஆட்சியிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த ஓர் ஆண்டிற்கான நிலுவைத் தொகையினை வசூலிப்பதும் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புதிய உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

மின்சாரவாரியத்தின் கடன் ரூ.1,59,000 கோடி. இதில் குறைந்தபட்சம் 9.5% முதல் 13% வரை வட்டி செலுத்தப்பட்டு வருகிறது. அந்த வட்டிக்குண்டான

சதவீதத்திதை குறைப்பதற்கான முயற்சிகள் முன்எடுக்கப்பட்டு வருகிறது. குறைந்த வட்டிக்கு அந்த கடன்களை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஓராண்டிற்கு மின்சாரவாரியத்திற்கு ரூ. 2,000 கோடி வரை சேமிப்பு செய்யக்கூடிய பணிகளை மாண்புமிகு தளபதி அரசு முன்னெடுத்து வருகிறது. அதைபோல் தனியாரிடமிருந்து மின்சாரத்தை கொள்முதல் செய்வதை தவிர்த்து, அதிகவிலை கொடுத்து கொள்முதல் செய்வதற்கு பதிலாக நாம் தமக்கு தேவையான மின்உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என திமுகவின் தேர்தல் வாக்குறுதியில் 20,000 மெகாவாட் அளவிற்கு சூரிய மின்சக்தி திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. முதல் ஆண்டில் மின்சார வாரியம் 4 ஆயிரம் மெகாவாட் அளவிற்க்கு சூரிய மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக திருவாரூரில் சூரிய மின்சக்தி பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். 2006 – 2011 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் இன்னும் செயல்படுத்தப்படமால் இருப்பவை அல்லது தொடங்கப்பட்டு முடிவுபெறமால் இருப்பவை இவைகள் அனைத்திலும் தற்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படவுள்ளது.

நிலக்கரி முறைகேடு குறித்து நிலை என்ன?

முதற்கட்ட விசாரணையில் 3 இலட்சம் டன் நிலக்கரி காணாமல் போயிருந்தது. பதிவேற்றத்திற்கும், இருப்பதற்கும் உள்ள வித்தியாசம் குறித்து முழு அறிக்கை வழங்கப்பட்டபின் அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உடன்குடி, உப்பூர் திட்டம் குறித்து ?

சட்டமன்ற அறிவிப்புகளில் இந்த திட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த மறு ஆய்வின் அடிப்படையில் அந்தத் திட்டம் தொடங்கப்படும்.

ஸ்மார்ட் மீட்டர் மற்றும் DT (Distribution Transformer) மீட்டர்

பொருத்துவதற்கலான வேலைகள் செயல்படுத்தப்பட உள்ளன. இதனால் மின் இழப்பு கணிசமாக குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 1 சதவீதம் குறைத்தாலே நமக்கு ரூ.800 கோடி இழப்பு குறைகிறது எறத்தாழ, 17% சதவீதம் Lineloss அளவு இருக்கிறது அந்த Lineloss குறைப்பதற்கு இந்த ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியில் அரசு தீவிரம் காட்டிவருகிறது. விரைவில் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

டாஸ்மாக் பொறுத்தவரை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தவர்கள் 124 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். வரக்கூடிய புகார்களின்

அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். விற்பனையாளர்கள் நடைமுறைகள் மேம்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அந்த நடைமுறைகள் வருகின்ற பொழுது இதுபோன்ற குற்றசாட்டுகள் வராமல் செயல்படுத்தப்படும். அதற்கான பணிகள் டாஸ்மாக் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருகின்ற காலங்களில் இதுபோன்ற தவறுகள் இல்லாத அளவிற்கு சிறப்பான நடைமுறைகள் பின்பற்றப்படும் என்று கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**